சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 279/2020

**PW 2 மாரிமுத்து** **19.02.2026**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் புஷ்பலதாவின் பெரியப்பா கிருஷ்ணசாமி அவருக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார். புஷ்பலதா உயில் அடிப்படையில் சொத்து வேண்டும் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார். 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி என்ன பரிகாரம் இந்த வழக்கில் கோரியுள்ளார் என்று கேட்டால் புஷ்பலதா பெயர் மாற்றம் செய்ய ஊத்துக்குளி பஞ்சாயத்தில் கேட்டார். அவர்கள் அவ்வாறு செய்து கொடுக்க முடியாது என்ற காரணத்தினால் அவர் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார். 2ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. உயிலுக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி